## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 6-2 - மின்னிடைமடவார்கள்
**(கண்ணன் தாமதித்து வரக் கண்ட நாயகி 'உமக்கு வேண்டின ஸ்த்ரீகள் இருக்க இங்கே வர வேண்டா' என்று ஊடல் திறத்தினால் தள்ளிப் பேசுதல்)**

3238 * மின்னிடை மடவார்கள் நின்னருள் சூடுவார் * முன்பு நான் அதஞ்சுவன் *
மன்னுடை இலங்கை * அரண் காய்ந்த மாயவனே! **
உன்னுடைய சுண்டாயம் நான் அறிவன் * இனி அது கொண்டு -
செய்வதென்? *
என்னுடைய பந்தும் கழலும் * தந்து போகு நம்பீ! 1

3239 போகு நம்பீ! உன் தாமரை புரை கண்ணிணையும் * செவ்வாய் முறுவலும் *
ஆகுலங்கள் செய்ய * அழிதற்கே நோற்றோமே யாம்? **
தோகைமா மயிலார்கள் நின்னருள் சூடுவார் * செவியோசை வைத்தெழ *
ஆகள் போக விட்டுக் * குழலூது போயிருந்தே 2

3240 போயிருந்து நின் புள்ளுவம் அறியாதவர்க்கு * உரை நம்பீ! * நின் செய்ய
வாயிருங்கனியும் கண்களும் * விபரீதம் இந்நாள் **
வேயிருந்தடந்தோளினார் * இத்திருவருள் பெறுவார் யவர் கொல்? *
மாயிருங்கடலைக் கடைந்த * பெருமானாலே 3

3241 ஆலினீளிலை ஏழுலகம் உண்டு * அன்று நீ கிடந்தாய் * உன் மாயங்கள்
மேலை வானவரும் அறியார் * இனி எம் பரமே? **
வேலினேர் தடங்கண்ணினார் * விளையாடு சூழலைச் சூழவே நின்று *
காலி மேய்க்க வல்லாய்! * எம்மை நீ கழறேலே 4

3242 கழறேல் நம்பீ! * உன் கைதவம் மண்ணும் விண்ணும் நன்கறியும் * திண் சக்கர
நிழறு தொல் படையாய்! * உனக்கு ஒன்று உணர்த்துவன் நான் **
மழறு தேன் மொழியார்கள் நின்னருள் சூடுவார் * மனம் வாடி நிற்க * எம்
குழறு பூவையொடும் * கிளியோடும் குழகேலே 5

3243 குழகி எங்கள் குழமணன் கொண்டு * கோயின்மை செய்து கன்மம் -
ஒன்றில்லை *
பழகி யாம் இருப்போம் * பரமே இத்திருவருள்கள்? **
அழகியார் இவ்வுலக மூன்றுக்கும் * தேவிமை தகுவார் பலருளர் *
கழகமேறேல் நம்பீ! * உனக்கும் இளைதே கன்மமே 6

3244 கன்மம் அன்று எங்கள் கையில் பாவை பறிப்பது * கடல் ஞாலம் உண்டிட்ட *
நின்மலா! நெடியாய்! * உனக்கேலும் பிழை பிழையே **
வன்மமே சொல்லி எம்மை நீ விளையாடுதி * அது கேட்கில் என்னைமார் *
தன்ம பாவம் என்னார் * ஒரு நான்று தடிபிணக்கே 7

3245 பிணக்கி யாவையும் யாவரும் * பிழையாமல் பேதித்தும் பேதியாததோர் *
கணக்கில் கீர்த்தி வெள்ளக் * கதிர் ஞான மூர்த்தியினாய்! **
இணக்கி எம்மை எம் தோழிமார் * விளையாடப் போதுமின் என்னப் –
போந்தோமை *
உணக்கி நீ வளைத்தால் * என் சொல்லார் உகவாதவரே! 8

3246 உகவையால் நெஞ்சம் உள்ளுருகி * உன் தாமரைத் தடங்கண் விழிகளின் *
அகவலைப்படுப்பான் * அழித்தாய் உன் திருவடியால் **
தகவு செய்திலை எங்கள் சிற்றிலும் * யாமடு சிறுசோறும் கண்டு * நின்
முகவொளி திகழ * முறுவல் செய்து நின்றிலையே 9

3247 நின்றிலங்கு முடியினாய்! * இருபத்தோர்கால் அரசு களை கட்ட *
வென்றி நீள்மழுவா! * வியன் ஞாலம் முன் படைத்தாய்! **
இன்று இவ்வாயர் குலத்தை வீடுய்யத் தோன்றிய * கருமாணிக்கச் சுடர்! *
நின் தன்னால் நலிவே படுவோம் * என்றும் ஆய்ச்சியோமே 10

3248 * ஆய்ச்சியாகிய அன்னையால் * அன்று வெண்ணெய் வார்த்தையுள் * -
சீற்றமுண்டமு
கூத்த அப்பன் தன்னைக் * குருகூர்ச் சடகோபன் **
ஏத்திய தமிழ் மாலை * ஆயிரத்துள் இவையுமோர் பத்து இசையொடும் *
நாத்தன்னால் நவில உரைப்பார்க்கு * இல்லை நல்குரவே 11

**அடிவரவு:** மின் போகு போய் ஆலின் கழறேல் குழகி கன்மம் பிணக்கி
உகவை நின்று ஆய்ச்சி நல்குரவு